



# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசின் மூன்றாண்டு சாதனைகள்

## திருவாரூர் மாவட்டம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்



# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
# புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
# அரசின் மூன்றாண்டு சாதனைகள்

## திருவாரூர் மாவட்டம்

சிறப்பு வெளியீடு எண். 42

இலவச வெளியீடு

# தமிழரசு

ஜூலை 2014

தொகுப்பு – கள விளம்பரப் பிரிவு

*வெளியிடுபவர் :*
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

# பதிப்புரை

*“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்லது அரசு” (குறள் 385)*

என்ற வள்ளுவனின் குறளுக்கிணங்க, ஏழை எளிய மக்களின் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையின் கீழ் மூன்றாண்டுகளில் முழுமையான வளர்ச்சியை கண்டோம். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியினை அழகுற எடுத்துக்காட்டும் வகையில் திருவாரூர் மாவட்டத்தில் அரசு துறைகளின் சார்பில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் முழுமையாக தொகுக்கப்பட்டு, **“மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் அரசின் மூன்றாண்டு சாதனைகள் – திருவாரூர் மாவட்டம்”** எனும் தலைப்பில், எழில்மிகு கையேடாக செய்தி மக்கள் தொடர்புத் துறையால் வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையில், அமைதி! வளம்! வளர்ச்சி! பாதையில் வெற்றி நடை போடும் திருவாரூர் மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை படம் பிடித்துக்காட்டும் விளக்கக் கையேடாக இந்நூல் அமைந்துள்ளது.

இக்கையேட்டினை அனைவரும் படித்து பயன்பெற அன்புடன் விழைகிறேன்.

**மூ. இராசாராம்,** இஆப
அரசுச் செயலாளர்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

# திருவாரூர் மாவட்டம்





*விலையில்லா அரிசி வழங்கும் திட்டம்*

**விலையில்லா அரிசி வழங்கும் திட்டம்**

❖ **3,39,613** குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா **20** கிலோ அரிசி வீதம் மாதந்தோறும் **4,537.830** மெட்ரிக் டன் விலையில்லா அரிசி.

## அந்தியோதயா அன்னயோஜனா திட்டம்

- ❖ 60,864 குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் தலா 35 கிலோ அரிசி வீதம் 21,307 மெட்ரிக் டன் விலையில்லா அரிசி.



*விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டம்*

## ஒரு கிலோ சன்னரக அரிசி ரூ.20க்கு வழங்கும் திட்டம்

- ❖ 1,91,454 குடும்பங்களுக்கு ரூ.38.29 இலட்சம் மதிப்பிலான அரிசி வழங்கப்பட்டுள்ளது.

## விலையில்லா கறவைப் பசு வழங்கும் திட்டம்

- ❖ ரூ.4.25 கோடி மதிப்பீட்டில் 1,200 கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை 374 கன்றுகளை ஈன்றுள்ளன.
- ❖ நாள் ஒன்றுக்கு கூடுதலாக 8,413 லிட்டர் பால் உற்பத்தியாகியுள்ளது. இதன் வாயிலாக 24 பால் கூட்டுறவு சங்கங்கள் புதியதாக தொடங்கப்பட்டுள்ளன.



*விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் வழங்கும் திட்டம்*

**விலையில்லா செம்மறி / வெள்ளாடுகள் வழங்கும் திட்டம்**

❖ 10,638 குடும்பங்களுக்குத் தலா 4 ஆடுகள் வீதம் ரூ.13.68 கோடி மதிப்பீட்டில் 42,552 விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இவை 22,776 குட்டிகளை ஈன்றுள்ளன.

**விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் வழங்கும் திட்டம்**

❖ 406 கிராமங்களில் உள்ள 1,59,482 இல்லத்தரசிகளுக்கு ரூ.87.38 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின் விசிறிகள்.



*விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்*

**விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்**

❖ பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு ரூ.37.98 கோடி மதிப்பீட்டில் 27,247 விலையில்லா மடிக்கணினிகள்.

**விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்**

❖ 11ஆம் வகுப்பு பயிலும் 40,130 மாணவ, மாணவிகளுக்கு ரூ.13.24 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகள்.

**திருமண நிதியுதவியுடன் 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டம்**

❖ படித்த ஏழைப்பெண்களுக்கு ரூ.25,000 நிதியுதவியுடன் தலா 4 கிராம் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தின்



*தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம்*

கீழ் 6,647 பயனாளிகளுக்கு ரூ.16.61 கோடி நிதி உதவியும், ரூ.7.77 கோடி மதிப்பிலான 26.588 கிலோ கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.

❖ பட்டம் / பட்டயம் படித்த ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000 நிதியுதவியும் தலா 4 கிராம் தாலிக்குத்தங்கம் வழங்கும் திட்டத்தின்கீழ் 3,080 பயனாளிகளுக்கு ரூ.15.40 கோடி நிதியுதவியும் ரூ.3.66 கோடி மதிப்பிலான 12.320 கிலோ கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்**

❖ 8,980 பயனாளிகளுக்கு ரூ. 21.51 கோடி செலவில் மருத்துவ சிகிச்சை.



*முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்*

## வருவாய்த்துறை

**சமூகப் பாதுகாப்புத் திட்டம்**

❖ 22,136 முதியோர்களுக்கு மாதம் ரூ.1,000 வீதம் ரூ.6.64 கோடி ஒய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

**ஆதரவற்ற மாற்றுத்திறனாளிகள் ஒய்வூதியத் திட்டம்**

❖ 2,075 ஆதரவற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு மாதம் ரூ.1,000 வீதம் ரூ.62.25 இலட்சம் ஒய்வூதியம்.



*முதியோர் ஓய்வூதியம்*

- ❖ ஆதரவற்ற கணவனால் கைவிடப்பட்டோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1,370 ஆதரவற்ற பெண்களுக்கு ரூ.41.10 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- ❖ 50 வயதைக் கடந்த திருமணமாகாத ஏழை மகளிர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 234 ஏழை மகளிருக்கு ஓய்வூதியமாக ரூ.7.02 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**இந்திரா காந்தி தேசிய விதவை ஓய்வூதியத் திட்டம்**

- ❖ 11,354 விதவைத் தாய்மார்களுக்கு ரூ.3.40 கோடி ஓய்வூதியம்.

**இந்திரா காந்தி தேசிய மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம்**

- ❖ 1,238 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதம் ரூ.1,000 வீதம் ரூ.37.14 இலட்சம் ஓய்வூதியம் .

### ஆதரவற்ற விதவை ஓய்வூதியத்திட்டம்

- 7,316 விதவைத் தாய்மார்களுக்கு மாதம் ரூ.1,000 வீதம் ரூ. 2.19 கோடி உதவித்தொகை.

### நலிந்தோர் நலத்திட்ட நிவாரண நிதியுதவித் திட்டம்

- 204 பயனாளிகளுக்கு ரூ.20.40 இலட்சம் உதவித்தொகை.

### விபத்து நிவாரண உதவித் தொகைத் திட்டம்

- 3 பயனாளிகளுக்கு விபத்து நிவாரண உதவித் தொகையாக ரூ.45,000.

### விரைவுப் பட்டா மாற்றம் செய்து தரும் புதிய திட்டம்

- 56,465 பட்டாக்கள் மாறுதல் செய்து தரப்பட்டுள்ளன.

### பயோமெட்ரிக் ஸ்மார்ட் கார்டு மூலம் ஓய்வூதியம் வழங்கும் திட்டம்

- சமூகப் பாதுகாப்பு திட்ட ஓய்வூதியங்களை சரியான பயனாளிகளுக்கு மாதத்தின் முதல் வாரத்திலேயே துரிதமாக வழங்கும் வகையில் பயோமெட்ரிக் ஸ்மார்ட் கார்டை (Bio Metric Smart card) வழங்கி வங்கி சேவையாளர் உதவியுடன் வங்கிகள் வாயிலாக ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் உள்ள 14,433 ஓய்வூதியதாரர்களுக்கு பயோமெட்ரிக் அட்டை வழங்கப்பட்டு, வங்கி மூலம் ரூ.4.33 கோடி ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.



*முன்னாள் படைவீரர்களின் குடும்ப நபர்களுக்கு
கல்வி உதவித்தொகை*

**முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்**

- மொத்தம் 22,281 விவசாயிகளுக்கு ரூ.15.27 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

**முன்னாள் படைவீரர்கள் நலத்துறை**

- முன்னாள் படைவீரர்கள் குடும்பங்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் வங்கிக்கடன் வட்டி மானிய நிதியுதவி ஆகியவற்றின் கீழ் மொத்தம் 16 நபர்களுக்கு ரூ.1.38 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை**

- சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 3,39,613 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.2.88 கோடி மதிப்பிலான



*விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்*

கோதுமை, பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம்பருப்பு ஆகியவை மலிவு விலையில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

**பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை**

❖ **23,476** மாணவ, மாணவிகளுக்கு ரூ.**10.60** கோடி மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகள்.

❖ **329** நபர்களுக்கு ரூ.**11.26** இலட்சம் மதிப்பீட்டில் தையல் இயந்திரங்கள்.

❖ **132** நபர்களுக்கு ரூ.**5.59** இலட்சம் மதிப்பில் விலையில்லா சலவைப் பெட்டிகள்.

- 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற 53 மாணவ, மாணவியர்களுக்குத் தலைசிறந்த பள்ளியில் சேர்ந்து படிக்க ரூ.12.31 இலட்சம் நிதியுதவி.
- 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற 80 மாணவ, மாணவியர்களுக்கு ரூ. 1.27 இலட்சம், 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற 55 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.1.82 இலட்சம் பரிசுத் தொகை.
- தந்தை பெரியார் விருதாக 64 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.4.83 இலட்சம் பரிசுத்தொகையும், பேரறிஞர் அண்ணா விருதாக 92 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.8.25 இலட்சம் பரிசுத் தொகை.
- கிராமப்புற பெண்கல்வி ஊக்குவிப்புத் தொகையாக 6,261 மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு ரூ.49.26 இலட்சம் கல்வி உதவித் தொகை.

**உலமாக்கள் ஓய்வூதியத் திட்டம்**

- 5 உலமாக்களுக்கு மாதம் தலா ரூ.1,000 வீதம் மொத்தம் ரூ.5,000 ஓய்வூதியம் வழங்க சிறுபான்மையினர் நல ஆணையருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- நரிக்குறவர் நலவாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள 122 நபர்களுக்கு ரூ.1.79 இலட்சம் நலத்திட்ட உதவியும், தனிநபர் தொழில் தொடங்க மானியத்துடன் கூடிய கடனாக 108 நபர்களுக்கு ரூ.8.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.



*தாட்கோ மூலம் சுயஉதவிக்குழுக்களுக்கு
பொருளாதார மேம்பாட்டிற்காக நிதியுதவி*

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

❖ மாணவச் செல்வங்களுக்கு ரூ.5.03 கோடி மதிப்பில் 16,472 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதி வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 1,08,424 (எண்ணிக்கை) ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.24.12 கோடி கல்வி உதவித் தொகையாக, 15,072 மாணவ, மாணவியர்களுக்கு சீருடைகளும், 10,269 மாணவ, மாணவிகளுக்கு பாடப் புத்தகங்களும், 8,665 மாணவ,

மாணவிகளுக்கு குறிப்பேடுகளும், 34 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலவிடுதிகளில் தங்கிப் பயிலும் 2,479 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.2,23,110 மதிப்பில் போர்வைகளும் வழங்கப்பட்டுள்ளன.

❖ தாட்கோ மூலம் 2,026 நபர்களுக்கு ரூ.403.10 இலட்சம் மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

## மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

### தன்னிறைவுத்திட்டம்

❖ பொதுமக்களின் பங்களிப்புடன் ரூ.546.90 இலட்சம் மதிப்பீட்டில் 87 பணிகள்.

### முழு சுகாதாரத் திட்டம்

❖ ரூ.216.15 இலட்சம் மதிப்பீட்டில் 722 பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் முழுமையான கழிப்பறைகள்.

### மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பசுமை வீடுகள் திட்டம்

❖ ரூ.7,920.60 இலட்சம் மதிப்பீட்டில் ஏழை, எளிய குடும்பங்களுக்குச் சூரிய மின் சக்தியுடன் கூடிய 4,951 பசுமை வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

## தாய் திட்டம்

### தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

❖ 231கிராமஊராட்சிகளைச்சார்ந்த1,251குக்கிராமங்களில் ரூ.6,586.55 இலட்சம் மதிப்பீட்டில் 4,245 பணிகள்.




*பசுமை வீடு திட்டம்*

**இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம்**

❖ ரூ.7,922.80 இலட்சம் செலவில் 7,349 வீடுகள்.

**சுகாதார வளாகங்கள்**

❖ 427 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் ரூ.622.02 இலட்சம் மதிப்பீட்டில், புனரமைக்கப் பட்டுள்ளன.

❖ 20 ஆண்கள் சுகாதார வளாகங்கள் ரூ.80 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ளன.

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

❖ ரூ.2,147.45 இலட்சம் மதிப்பீட்டில் 1,685 பணிகள்.

**நபார்டு திட்டம்**

❖ ரூ.1,699.13 இலட்சம் மதிப்பீட்டில் 34 கிராமப்புறச் சாலைகள்.



*மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்*

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**

❖ 2,27,142 குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டு 4,27,520 தனிநபர்களுக்கு வேலை அடையாள அட்டை வழங்கப்பட்டு 2,26,37,022 மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு 7,882 பணிகள் ரூ.22,715.68 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம்**

❖ ரூ.1,868.80 இலட்சம் செலவில் 402 பணிகள்.

**13ஆவது நிதிக்குழு மானியத் திட்டம்**

❖ ரூ.1,456.08 இலட்சம் மதிப்பீட்டில் 157.49 கி.மீட்டர் நீளத்திற்கு 99 சாலைப் பணிகள்.

❖ பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளை கொண்டு 5 சாலைப் பணிகளை ரூ.88.73 இலட்சம் செலவில் 9.730 கி.மீ. நீளத்திற்கு பிளாஸ்டிக் சாலை.

**சாண எரிவாயுத் திட்டம்**

❖ ரூ.8.84 இலட்சம் மானியத்துடன் 94 கலன்கள்.

**ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம்**

❖ ரூ.984.267 இலட்சம் மதிப்பீட்டில் 1,269 பணிகள்.

**கொரடாச்சேரி பேரூராட்சி**

❖ மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் கழிப்பிடம் .

❖ ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.60 இலட்சம் செலவில் தார்சாலைப் பணி, குடிநீர் பராமரிப்புப் பணிகள், வடிகால் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் .

❖ நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.34 இலட்சம் செலவில் 1 தார்சாலை.

**நீடாமங்கலம் பேரூராட்சி**

❖ மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் 1 கழிப்பிடம் .

❖ ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.52 இலட்சம் செலவில் தார்சாலைப் பணி, குடிநீர் பராமரிப்புப் பணிகள், வடிகால் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள்.

❖ நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.34 இலட்சம் செலவில் தார்சாலை.

### குடவாசல் பேரூராட்சி

- ❖ மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2.25 இலட்சம் மதிப்பீட்டில் 2 கழிப்பிடங்கள்.
- ❖ ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.42.02 இலட்சம் செலவில் தார்சாலைப் பணி, குடிநீர் பராமரிப்புப் பணிகள், வடிகால் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள்.
- ❖ நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.25 இலட்சம் செலவில் 1 தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

### முத்துப்பேட்டை பேரூராட்சி

- ❖ மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் 2 கழிப்பிடங்கள்.
- ❖ ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.83.76 இலட்சம் செலவில் தார்சாலைப் பணி, குடிநீர் பராமரிப்புப் பணிகள், வடிகால் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள்.
- ❖ நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.71 இலட்சம் செலவில் 3 தார்சாலைகள்.

### பேரளம் பேரூராட்சி

- ❖ மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் 1 கழிப்பிடம்.
- ❖ தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் 1 தார்சாலை.

❖ ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.138.60 இலட்சம் செலவில் தார்சாலைப் பணி, குடிநீர் பராமரிப்புப் பணிகள், வடிகால் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணி என மொத்தம் 13 பணிகள்.

❖ நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.44 இலட்சம் செலவில் 3 குளங்கள் மேம்பாடு.

**நன்னிலம் பேரூராட்சி**

❖ மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் 1 கழிப்பிடம்.

❖ தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.87.50 இலட்சம் மதிப்பீட்டில் 1.500 கி.மீ. நீளத்திற்கு 2 தார்சாலைகள்.

❖ பகுதி–2 திட்டத்தின் கீழ் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம்.

❖ ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.75.70 இலட்சம் செலவில் தார்சாலை பணி, குடிநீர் பராமரிப்புப் பணிகள், வடிகால் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணி என மொத்தம் 14 பணிகள்.

❖ நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.67 இலட்சம் செலவில் 2 கி.மீ. நீளத்திற்கு 2 தார்சாலைகள் மற்றும் ஒரு பொதுசுகாதார வளாகம் .

**வலங்கைமான் பேரூராட்சி**

❖ மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் 1 கழிப்பிடம்.

- ❖ தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.61 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலைகள்.
- ❖ பகுதி–2 திட்டத்தின் கீழ் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடங்கள்.
- ❖ ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.25 இலட்சம் செலவில் தார்சாலைப் பணி.
- ❖ நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.19 இலட்சம் செலவில் 1 தார்சாலை.

**முத்துப்பேட்டை பேரூராட்சி**

- ❖ பேரூராட்சிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் 2 கழிப்பிடங்கள்.
- ❖ ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.83.76 இலட்சம் செலவில் தார்சாலைப் பணி, குடிநீர் பராமரிப்புப் பணிகள், வடிகால் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணி என மொத்தம் 7 பணிகள்.
- ❖ நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.71 இலட்சம் செலவில் 3 தார்சாலைகள்.

**திருவாரூர் நகராட்சி**

- ❖ ரூ.600 இலட்சம் மதிப்பில் புதிய பேருந்து நிலையம்.
- ❖ ரூ.76.33 இலட்சம் செலவில் 4.470 கி.மீட்டர் நீளம் பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார்சாலைகள்.

- ❖ வறட்சி நிவாரண நிதியின் கீழ் ரூ.103.50 இலட்சம் மதிப்பில் 23 ஆழ்துளைக் கிணறு மற்றும் மினிபவர் பம்ப் அமைத்தல் உள்ளிட்ட குடிநீர் மேம்பாட்டுப் பணிகள்.
- ❖ ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.4.90 கோடி செலவில் பல்வேறு பணிகள்.
- ❖ ரூ.993 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால், சிறுபாலங்கள் மற்றும் தார்சாலைகள் அமைக்கும் பணிகள்.

**மன்னார்குடி நகராட்சி**

- ❖ ரூ.2.26 கோடி மதிப்பில் புதிய கட்டடங்கள்.
- ❖ ரூ.8 இலட்சம் செலவில் 1.11 கி. மீட்டர் நீளம் பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார்சாலை.
- ❖ வறட்சி நிவாரண நிதியின் கீழ் ரூ.65 இலட்சம் மதிப்பில் 52 ஆழ்துளை கிணறு மற்றும் மினிபவர் பம்ப்.
- ❖ ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.591 கோடி செலவில் பல்வேறு பணிகள்.

**திருத்துறைப்புண்டி நகராட்சி**

- ❖ ரூ.10 இலட்சம் மதிப்பில் புதிய கட்டடங்கள்.
- ❖ ரூ.22.30 இலட்சம் செலவில் 2.595 கி.மீட்டர் நீளம் பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார்சாலை.
- ❖ வறட்சி நிவாரண நிதியின் கீழ் ரூ. 13.50 இலட்சம் மதிப்பில் 9 ஆழ்துளைக் கிணறு மற்றும் மினிபவர் பம்ப்.

❖ ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.2.24 கோடி செலவில் பல்வேறு பணிகள்.

**கூத்தாநல்லூர் நகராட்சி**

❖ ரூ.5 இலட்சம் மதிப்பில் (அங்காடிக் கட்டடம்) புதிய கட்டடங்கள்.

❖ ரூ.20.55 இலட்சம் செலவில் 2 கி.மீட்டர் நீளம் பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார்சாலை.

❖ வறட்சி நிவாரண நிதியின் கீழ் ரூ.25 இலட்சம் மதிப்பில் 10 ஆழ்துளை கிணறு மற்றும் மினிபவர் பம்ப் அமைத்தல் உள்ளிட்ட குடிநீர் மேம்பாட்டுப் பணிகள்.

❖ ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.2.10 கோடி செலவில் பல்வேறு பணிகள்.

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு ஆணையம்**
**(மகளிர் திட்டம்)**

❖ 17,654 உறுப்பினர்கள் கொண்ட மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ரூ.3.17 கோடி தொகையை சேமிப்பாக வைத்துள்ளனர்.

❖ 1,068 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதிக் கடனாக ரூ.6.72 கோடியும், பொருளாதாரக் கடனாக ரூ.2.62 கோடி.

❖ 8,988 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.125.17 இலட்சம் வங்கிகளின் மூலம் நேரடிக் கடன்.

❖ 131 ஊராட்சி அளவிலான குழுக் கட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக ரூ.131 இலட்சமும் பெருங்கடனாக ரூ.37.75 இலட்சமும் கடனுதவி.



*தொட்டில் குழந்தைத் திட்டம்*

- 403 இளைஞர்களுக்கு ரூ.19.14 இலட்சம் செலவில் தொழில் மேம்பாட்டுப் பயிற்சி.

## சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை

### குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் 2005

- 2 பெண் குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

### பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

- 1,800 குடும்பங்களைச் சார்ந்த 3,588 பெண் குழந்தைகளுக்கு ரூ.6.46 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### தொட்டில் குழந்தைத் திட்டம்

- அரசுத் தொட்டிலில் போடப்பட்ட 4 ஆண் குழந்தைகள் மற்றும் 14 பெண் குழந்தைகளை அரசு எடுத்து வளர்த்து வருகிறது.

**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்**

❖ 10 ஊராட்சி ஒன்றியங்கள், 2 நகராட்சிகள் என 984 பள்ளிகளில் 5 வயது முதல் 14 வயது வரை மொத்தம் 99,027 மாணவ, மாணவிகள் பயன்.

**புதிய சத்துணவு முறை திட்டம்**

❖ 13 வகையான சத்தான (வெரைட்டி) விதவிதமான கலவை சாதங்கள் 3 பள்ளிகளில் நாள் ஒன்றுக்கு ரூ.4,393 செலவில் வழங்கப்பட்டு 657 மாணவ, மாணவிகள் பயன்பெற்று வருகின்றனர்.

**ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்**

❖ 1,127 முதன்மை மையங்களும் 133 குறு மையங்களும் செயல்பட்டு வருகின்றன.

❖ நாளொன்றுக்கு 26,271 குழந்தைகளுக்கு, முன்பருவக் கல்வி மற்றும் மதிய உணவு.

❖ 6 மாதம் முதல் 36 மாதங்கள் வரையுள்ள 36,224 குழந்தைகளுக்கு, இணை உணவு.

❖ 7,415 இணை உணவு உண்ணும் கர்ப்பிணிகள், 6,413 பாலூட்டும் தாய்மார்கள் பயன்.

❖ 37,620 குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1.54 கோடி மதிப்பீட்டில் முட்டைகள்.

❖ 900 வளர் இளம் பெண்களுக்கு தொழிற்பயிற்சி.

## மாற்றுத் திறனாளிகள் நலத்துறை

❖ மாற்றுத் திறனாளிகளை திருமணம் செய்து கொள்ளும்



*மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனம்*

சாதாரண நபருக்கு திருமண உதவித்தொகையாக 31 நபர்களுக்கு ரூ.8.75 இலட்சம் மற்றும் 124 கிராம் தங்கம்.

- 1,581 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.35.93 இலட்சம் செலவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்.
- 23,240 நபர்களுக்கு மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டைகள்.
- 322 நபர்களுக்கு இலவச பேருந்து பயணச் சலுகை அட்டைகள்.
- 697 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.34.29 இலட்சம் மதிப்பில் உதவி உபகரணங்கள்.
- கடுமையாக இயலாதோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் தசைசிதைவு நோயால் பாதிக்கப்பட்டோருக்கான

பராமரிப்பு உதவி தொகை மாதம் தலா ரூ.1,000 வீதம் 2,817 நபர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## வேளாண்மைத்துறை

❖ விதைப்பெருக்குத் திட்டத்தின் கீழ் 3,522 மெட்ரிக் டன் சான்று நெல் விதைகள், 730.4 மெட்ரிக் டன் பயறு வகைப் பயிர் சான்று விதைகள், 7.1 மெட்ரிக் டன் எண்ணெய் வித்து பயிர்களின் சான்று விதைகள் விநியோகம்.

❖ 73,803 விவசாயிகளுக்கு ரூ.374.5 இலட்சம் மானியத்தில் விதை கிராமத் திட்டத்தின் கீழ் 50 சதவிகித மானிய விலையில் நெல், சிறு தானியங்கள், பயறு வகை பயிர்களின் சான்று விதைகள் மொத்தம் 1,429 மெட்ரிக் டன்கள் வழங்கல்.

❖ தரமான சான்று விதைகள் உற்பத்தி பற்றிய 632 தொழில்நுட்ப பயிற்சிகள் ரூ.94.8 இலட்சம் மதிப்பீட்டில் அளிக்கப்பட்டு 63,200 விவசாயிகள் பயன்.

❖ தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.2,745.871 இலட்சம் செலவில் திருந்திய நெல் சாகுபடி முறைகள், பயறு வகைகள், தீவிர சிறுதானிய உற்பத்தி திட்டம், அதிக விளைச்சல் பெற துல்லிய பண்ணையம் அமைத்தல் ஆகிய திட்டங்கள் செயல்பாடு.

❖ உழவர் பெருவிழா மூலம் ரூ.254.40 இலட்சம் மதிப்பீட்டில் 64,856 விவசாயிகள் பயன் அடையும் வகையில் இடுபொருட்கள்.

❖ காவிரி டெல்டா பகுதிகளைச் சார்ந்த இம்மாவட்டத்தில் 1,32,633 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக ரூ.140.4165 கோடி.



*வேளாண் உற்பத்திக்கான விருது*

- சம்பா பயிரைக் காப்பாற்ற விவசாயிகளுக்கு டீசலுக்கான மானியமாக ரூ. 5.32 கோடி .

**மீனவர் நலன்**

- மீன்பிடித்தடைக்கால நிவாரண உதவி ரூ.2,000 ஆக உயர்த்தப்பட்டு, 2,301 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.46.02 இலட்சம் நிவாரணம் .
- மீன்பிடிப்புக் குறைந்த கால நிவாரண உதவி வழங்கும் புதிய திட்டத்தின் கீழ் ரூ.4,000 வீதம் 2,172 மீனவக்குடும்பங்களுக்கு ரூ.86.88 இலட்சம் நிவாரணம்.

## உயர்கல்வித் துறை

- நன்னிலம், திருத்துறைப்பூண்டி ஆகிய இடங்களில்



*மீன்பிடித் தடைக்கால நிவாரண உதவித் தொகை*

பாரதிதாசன் பல்கலைக்கழக மாதிரிக் கல்லூரிகள் தொடங்கப்பட்டது.

## வேளாண் பொறியியல் துறை

### தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

❖ 2,008 விவசாயிகளுக்கு ரூ.849.77 இலட்சம் மானியத்தில் வேளாண்மை இயந்திரங்கள்/கருவிகள்.

### வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம்

❖ டிராக்டர், பவர் டில்லர், ரோட்டவேட்டர் போன்ற இயந்திரங்கள், கருவிகள் 250 விவசாயிகளுக்கு ரூ.110.22 இலட்சம் மானியம்.

**மழைநீர் சேகரிப்பு மற்றும் மேலாண்மைத் திட்டம்**

❖ ரூ.43.75 இலட்சம் செலவில் 80 பண்ணைக் குட்டைகள், தடுப்பணைகள் மற்றும் கிராமக் குட்டைகள்.

❖ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண் கருவிகளை இயக்குவதற்கான 6 மாத கால பயிற்சித் திட்டத்தின் கீழ் ரூ.9.09 இலட்சம் செலவில் 110 இளைஞர்களுக்குப் பயிற்சி.

❖ விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.317.83 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்கள்.

## தோட்டக்கலைத்துறை

**ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்**

❖ உயர் விளைச்சல் தரும் வீரிய ஒட்டுரக காய்கறி விதைகள் மற்றும் நடவுச் செடிகள் ரூ.40 இலட்சம் மதிப்பில் 50 சதவிகித மானியத்தில் 3,620 விவசாயிகளுக்கு விநியோகம்.

**சொட்டுநீர் பாசனத் திட்டம்**

❖ ரூ.1.35 கோடி செலவில் கருவிகள் அமைக்கப்பட்டு 461 பயனாளிகள் பயன்.

**தேசிய மூங்கில் இயக்கம்**

❖ 174 பயனாளிகள் மூங்கில் சாகுபடி மேற்கொள்ள ரூ.4.189 இலட்சம் மதிப்பில் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

❖ வேளாண் வணிகத் திட்டத்தின் கீழ் காலத்தில் ரூ.1,126.035 இலட்சம் மதிப்பிலான 9,189.299 மெ.டன் விலைப் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு 627 நபர்களுக்கு ரூ.583.10 இலட்சம் பொருளீட்டுக் கடன்.

❖ விற்பனைக் கூடப் பகுதிகளில் 75,850.028 மெ.டன் அளவுள்ள விலைப் பொருட்களுக்குக் கட்டணத் தொகையாக ரூ.453.45 இலட்சம் வசூல்.

## பட்டு வளர்ச்சித்துறை

❖ கடந்த ஆண்டுகளில் 70 ஏக்கர் மல்பரி நடவு குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 72 ஏக்கர் மல்பரி நடவு.

❖ வெண்பட்டு முட்டைகள் அறுவடை செய்யப்பட்டு 5,621 கிலோகிராம் வெண்பட்டு கூடுகள் மற்றும் 21.454 கி.கிராம் கலப்பினப் பட்டு கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. பட்டு வளர்ச்சித்துறையின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் கிரியா ஊக்கத்திட்டத்தின் கீழ் புதியதாக மல்பரி நடவு செய்துள்ள விவசாயிகளுக்கு ரூ.2.26 இலட்சம் மல்பரி நடவு ஊக்க உதவித்தொகை.

❖ தனிப்புழு வளர்ப்பு மனை அமைத்துள்ள 1 பட்டு விவசாயிக்கு மானியத்தொகையாக ரூ.75,000 நிதியுதவி.



*விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டம்*

## கால்நடை பராமரிப்புத்துறை

❖ தீவனப் பயிர்த்திட்டத்தின் கீழ் 730 ஏக்கர் நிலப்பரப்பில் தீவனப் பயிர் சாகுபடிக்காக 100 சதவிகித மானியத்தில் ரூ.87.6 இலட்சம் ஒதுக்கீடு.

**கோழிப்பண்ணை வளர்ச்சித் திட்டம்**

❖ நாட்டுக்கோழிப் பண்ணைகள் ரூ.321.75 இலட்சம் மதிப்பில் 50 சதவிகித மானியத்துடன் 275 நாட்டுக்கோழி பண்ணைகள்.

❖ 16 கால்நடை மருந்தகங்களுக்கு ரூ.338.9 இலட்சம் மதிப்பில் 16 புதிய கட்டடங்கள்.

❖ 28 கால்நடை மருந்தகங்கள் ரூ.128 இலட்சம் மதிப்பில் பலப்படுத்தப்பட்டுள்ளன.

❖ தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் 3 கால்நடை மருந்தகங்களுக்கான கட்டடப் பணிகள்.

**தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்**

❖ 10 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த குக்கிராமங்களில் உள்ள கால்நடைகள் பயன்பெறும் வண்ணம் நோய் தடுப்பு மற்றும் நோய் நீக்கப் பணிகளுக்காக ரூ.5.04 இலட்சம் மதிப்பில் 420 கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள்.

❖ வறட்சி மேலாண்மைத் திட்டத்தின் கீழ் 50 சதவிகித மானியத்தில் கால்நடைகளுக்கு குறைவில்லா தீவனம் வழங்கும் பொருட்டு 700 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.47.6 இலட்சம் ஒதுக்கீட்டில் 499 பயனாளிகள் மூலம் தீவன சோளப்பயிர் விளைவிக்கப்பட்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக ஏனைய பயனாளிகளுக்கு 50 சதவிகித மானியம்.

## வனத்துறை

❖ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 2,03,125 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

❖ 2,600 எக்டேர் பரப்பளவு கொண்ட படுகை தேக்கு தோட்டங்களில் ரூ.93 இலட்சம் மதிப்பில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 1,775 எக்டேர் பரப்பளவில் தேக்கு தோட்டங்கள் உருவாக்கிட ரூ.175.20 இலட்சம் செலவில் தேக்கு மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.




*விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம்*

## கூட்டுறவுத்துறை

❖ கூட்டுறவு சங்கங்களில் மக்களாட்சித் தத்துவம் மலர ஏதுவாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அமைக்கப்பட்ட மாநில கூட்டுறவு தேர்தல் ஆணையம் வாயிலாக 187 தொடக்க கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல்.

❖ 1,15,035 விவசாயிகளுக்கு ரூ.359.33 கோடி குறுகிய காலப் பயிர்க்கடன், 34,552 ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு ரூ.98.42 கோடி பயிர்க்கடன், 2,005

விவசாயிகளுக்கு ரூ.10.79 கோடி முதலீட்டுக் கடன், வேளாண் விளைப்பொருட்கள் ஈட்டு கடனாக 347 விவசாயிகளுக்கு ரூ.0.06 கோடி.

- ❖ தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 2,96,119 விவசாயிகளுக்கு ரூ.714.20 கோடி நகைக்கடன், 265 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.0.06 கோடியும், சிறுபான்மையினர் 268 நபர்களுக்கு ரூ.91.70 இலட்சம் என பல்வேறு கடன் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் விளைப்பொருட்களை சேமிக்க ஏதுவாக நபார்டு வங்கி நிதியுதவியுடன் தலா ரூ.8 இலட்சம் முதல் ரூ.12.50 இலட்சம் மதிப்பில் 114 ஊரக கிடங்குகள் ரூ.11.65 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ளது.

**மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு**

- ❖ மாவட்டத்தில் எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட 39 நபர்களுக்கு தாட்கோ உதவித்தொகையும், 76 நபர்களுக்கு விதவைகள் உதவித்தொகையும், 73 நபர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டையும், 5 நபர்களுக்கு விலையில்லா கால்நடைகளும், உலக எய்ட்ஸ் தினத்தன்று 18 குழந்தைகளுக்கு ரூ.63,000 மதிப்பில் கல்வி மற்றும் மருத்துவ உதவித் தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

**உழவர் பாதுகாப்புத் திட்டம்**

- ❖ 132 நபர்களுக்கு மாதாந்திர உதவித்தொகையாக ரூ.1,000 வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

## பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருத்துவத்துறை

- ❖ 42 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.6.72 கோடி மதிப்பில் புதிய கட்டடங்கள்.



*கல்வி உதவித் தொகை*

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்**

❖ 33,848 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.32.16 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம்**

❖ 6 மற்றும் 7ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச கண் பரிசோதனை செய்யப்பட்டு 1,630 மாணவர்களுக்கு கண் கண்ணாடிகள்.

❖ பல் பாதுகாப்புத் திட்டத்தில் 47,612 குழந்தைகளுக்கு பல் சிகிச்சை.

❖ யானைக்கால் நோயினால் பாதிக்கப்பட்ட 53 நபர்களுக்கு மாதந்தோறும் ரூ.400 உதவித்தொகை.

**பெண்கள் நலத்திட்டம்**

❖ கருப்பை வாய் புற்றுநோய் கண்டறியப்பட்டு சிகிச்சை அளித்திட இதுவரை 210 முகாம்கள் நடத்தப்பட்டு 441 நபர்களுக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோயும் 125 நபர்களுக்கு மார்பக புற்றுநோயும் கண்டறியப்பட்டு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பிறவி குறைபாடுடைய 135 ஆண், 109 பெண் குழந்தைகள் கணக்கெடுக்கப்பட்டு சிகிச்சை.

**மாவட்ட பார்வை இழப்புத் தடுப்புச் சங்கம்**

❖ மாவட்ட பார்வை இழப்புத் தடுப்புச் சங்கம் மற்றும் அரசு தலைமை மருத்துவமனை, தொண்டு நிறுவனங்கள், தனியார் மருத்துவமனைகள் மூலம் கண்புரை நோய் மற்றும் இதர குறைபாடுகளுக்கு நவீன சிகிச்சைப் பெற்று 19,484 நபர்கள் பயனடைந்துள்ளனர். 63,779 பள்ளிக் குழந்தைகளுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டது.

❖ 365 மாணவ, மாணவியர்களுக்கு பார்வைத் திறன் மூக்குக் கண்ணாடிகள் வழங்கி பார்வை குறைபாடு தவிர்க்கப்பட்டது.

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை

❖ டெங்கு காய்ச்சல் பரவிய காலத்தில் அனைத்து மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிலவேம்பு குடிநீர், பப்பாளி இலைச்சாறு, மலைவேம்புச் சாறு புற மற்றும் உள் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டது.




*மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா சீருடைகள்,
பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள்*

## பள்ளிக் கல்வித்துறை

❖ அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தில், இதுவரை 21,664 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.30,19,74,496 மதிப்பீட்டில் விலையில்லா மடிக்கணினிகள்.

❖ அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளைச் சேர்ந்த 4,03,499 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா பாடநூல்கள்.

❖ 2,04,220 மாணவ, மாணவியர்களுக்கு பாடக் குறிப்பேடுகள்.

❖ 40,130 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.13,24,29,000 மதிப்புள்ள விலையில்லா மிதிவண்டிகள்.

❖ 6 முதல் 8ஆம் வகுப்பு பயிலும் 1,60,000 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா வண்ணச் சீருடைகள் தலா 4 செட் வீதம் வழங்கப்பட்டுள்ளது.

❖ வருவாய் ஈட்டும் தாய், தந்தையர் விபத்தில் இறந்தாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ அவர்தம் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை ரூ.50,000 வழங்கும் திட்டத்தின் கீழ் 16 மாணவ, மாணவிகளுக்கு ரூ.8,00,000 வழங்கப்பட்டுள்ளது.

❖ விலையில்லா பாடநூல் வழங்கும் திட்டத்தின் கீழ் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் 4,03,499 விலையில்லா பாடநூல்களும், இலவச பேருந்து பயண சலுகை அட்டை வழங்கும் திட்டத்தில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 91,479 மாணவ, மாணவியர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டைகளும், விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் 6,7,8ஆம் வகுப்பு பயின்று வரும் 1,60,000 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா சீருடைகளும் வழங்கப்பட்டுள்ளன.

❖ 90,449 மாணவ, மாணவியர்களுக்கு கணித வரைப்படப்பெட்டி.

❖ 2,86,716 மாணவ, மாணவியர்களுக்கு புத்தகப்பை.

❖ 83,393 மாணவ, மாணவியர்களுக்கு புவியியல் வரைபடம்.

❖ 2,11,213 மாணவ, மாணவியர்களுக்கு இலவசக் காலணிகள்.

- 69,655 மாணவ, மாணவியர்களுக்கு வண்ணப் பென்சில்கள்.

**அனைவருக்கும் கல்வி இயக்கம்**

- ஆசிரியர்கள் கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் தயாரிப்பதற்காக ஆசிரியர் மானியம் ரூ.500 வீதம் ரூ.20.860 இலட்சங்கள்.
- பள்ளி செல்லா மற்றும் இடைநின்ற குழந்தைகள் கல்வி பயில இதுவரை ரூ.176.092 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.
- பள்ளிக்குத் தேவையான பள்ளி தளவாடப் பொருட்கள் வாங்குவதற்கான பள்ளி மானியம் 892 (1 முதல் 5 வகுப்புகள் வரை) பள்ளிகளுக்குத் தலா ரூ.5,000 வீதம் ரூ.1.34 கோடி, (6 முதல் 8 வகுப்புகள் வரை) பள்ளிகளுக்கு தலா ரூ.7,000 வீதம் 404 பள்ளிகளுக்கு ரூ.84.84 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- கட்டுமானப் பணிகளுக்கென்று ரூ1,735.527 இலட்சம் செலவில் பணிகள்.

**மாவட்டத் தொழில் மையம்**

- 1,206 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தொழில் முனைவோர் ஒப்புகைச் சான்று. 1,015 பொதுப் பிரிவினருக்கும் 191 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும் புதிய தொழில் தொடங்குவதற்கு அனுமதி.
- வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 371 இளைஞர்களுக்கு ரூ.404.86 இலட்சம் கடனுதவி ரூ.60.73 இலட்சம் மானியத்துடன் வழங்கப்பட்டுள்ளது.



*பணி நியமன ஆணை*

- குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு மூலதன மானியமாக ரூ.**74.23** இலட்சமும், மின் மானியமாக ரூ.**13.39** இலட்சமும், மின்னாக்கி மானியமாக ரூ.**8.48** இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

- புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் **8** நபர்களுக்கு ரூ.**134.60** இலட்சம் மதிப்பில் ரூ.**28.89** இலட்சம் மானியமாக வழங்க முடிவு செய்யப்பட்டு, இதுவரை **5** நபர்களுக்கு ரூ.**74.93** இலட்சம் வங்கிகளால் கடன் தொகை வழங்கப்பட்டு **5** நபர்களுக்கு ரூ.**14.69** இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

# வேலைவாய்ப்புத்துறை

**வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகை வழங்கும் திட்டம்**

❖ வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்து 5 ஆண்டுகள் முடிவுற்ற 42,269 இளைஞர்களுக்கு ரூ.2.99 கோடி உதவித் தொகை.

❖ 43 அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கும் 313 தாழ்த்தப்பட்டோர் மற்றும் இதர பிரிவினருக்கும் பணி நியமனம் செய்திட பரிந்துரை செய்து வேலைவாய்ப்பு.

# சிறுசேமிப்புத்துறை

❖ சிறுசேமிப்பு மொத்த வசூல் தொகை ரூ.337.33 கோடி திரட்டப்பட்டுள்ளது.

❖ மகளிர் முகவர்களுக்கு சிறுசேமிப்புத் திட்டத்தில் முதலீடு திரட்டியமைக்கு ஊக்கத்தொகை ரூ.44.27 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் புனரமைப்புத் திட்டம்**

❖ 74 பணிகளுக்காக ரூ.285.29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

**தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்**

